<u>**கம்பம் நகராட்சி**</u>

**2018—ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் (31.12.2018) ஆம் நாள் திங்கள் கிழமை பிற்பகல் 04.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

<u>**கூட்டப் பொருட்கள்**</u>

| | |
|---|---|
| **1.** | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 12/2018—ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | நகராட்சி பொறியாளர் அவர்களின் 12/2018—ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **3.** | கம்பம் நகராட்சியில் குத்தகை மற்றும் இதர பணிகளுக்காக பிடித்தம் செய்யப்படும் சேவை வரியினை உரிய அரச தலைப்பில் செலுத்துவதற்கு இந்நகராட்சிக்கென GST பதிவு எண் பெற்றதற்கும், ஒப்பந்ததாரர்களிடமிருந்து TDS முறையில் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை கட்டண வரி (GST) செலுத்துவதற்கென பதிவு எண் பெற்றதற்கும், மேற்சொன்ன இரு இனங்களுக்காக வசூலிக்கப்படும் தொகையினை உரிய அரசு தலைப்பில் GST TDS (GST) Online முறையில் செலுத்தி Return File செய்வதற்கும் ஆகும் நிர்வாக உத்தேச செலவினம் ரூ. 50,000/—ற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)**வசூலிக்கப்பட்ட சேவை வரி மற்றும் சரக்கு மற்றும் சேவை கட்டண வரியினை செலுத்துவதற்கு உரிய பதிவு எண் பெற்றதற்கும், மேற்சொன்ன இனங்களுக்காக வசூலிக்கப்பட்ட தொகையினை ஜுலை **2017** முதல் அக்டோபர் **2018** வரை அரசு தலைப்பில் Online முறையில் இருசால் செய்ய உரிய ஆவணங்கள் தயாரித்தமைக்கும் மற்றும் Return File செய்தமைக்கும் ரூ. **9,000/—** திரு. பி. விருமாண்டி, கணக்காயர் அவர்களுக்கு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3330/2017/பி2)** |
| **4.** | இந்நகர்மன்ற தீர்மான எண்.**1628**, நாள்.**31.10.2018** – இல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி, இந்நகராட்சியில் இயங்கி வரும் மின்கலன்கள் 2 KVA online UPS – 2 Nos, 3KVA online UPS – 1 No and 5 KVA online UPS – 1 No ஆகியவற்றிற்கு **01.01.2019** முதல் **31.12.2019** வரை ஓராண்டிற்கு Annual Maintenance Contract (AMC) பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட நாள். **24.12.2018** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | சன்ரைஸ் எண்டர்பிரைசஸ், 19, மாதாகோவில் வடக்கு தெரு, கே. புதூர், மதுரை | ரூ. 38,608/– |
| 2. | சன் பவர் கன்ட்ரோல், 6/19, வெங்கட்ராமன் தெரு, சின்னக்சொக்கிக் குளம், மதுரை | ரூ. 36,225/– |
| 3. | அல்ட்ரா பவர் சொலுசன்ஸ், 8/33, லூர்து நகர், 7–வது மெயின்ரோடு, கே.புதூர், மதுரை–7 | ரூ. 33,709/– |

**அலுவலகக்குறிப்பு..**

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய மதுரை, அல்ட்ராபவர் சொலுசன்ஸ், நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1335/2018/இ1)

**5.** நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், மதுரை அவர்களது குறுஞ்செய்தியில் கோரியுள்ளதன்படி, தேனி மாவட்டம், கம்பம் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2018–19ன் கீழ் ரூ. 500.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **பணிகளின் பெயர்** | **மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | கோம்பை ரோடு, குரங்குமாயன் தெரு, விவேகானந்தர் தெரு, மந்தையம்மன் கோவில் தெரு, மந்தையம்மன் கோவில் பின்புறம், மந்தையம்மன் கோவில் கிழக்கு பகுதி மற்றும் நந்தகோபால் கோவில் மேற்கு தெருவில் தார்சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் | 200.00 |
| 2. | ரேஞ்சர்ஆபிஸ் ரோடு, ஆங்கூர்பாளையம் ரோடு, கக்கன் காலனி மெயின்ரோடு, ஏகலூத்து ரோடு டி.எஸ்.கே. நகர் சந்திப்பு, டாக்டர். அம்பேத்கார் தெரு, எல்.எப்.ரோடு குறுக்கு தெரு, செல்லாண்டியம்மன் கோவில் தெரு மற்றும் தாத்தப்பன் குளம் 5–வது குறுக்கு தெருவில் தார்சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் | 200.00 |
| 3. | ராமையன் தெரு, நந்தகோபால் சாமி கோவில் குறுக்கு சந்து, ஜல்லிக்கட்டு தெரு, வள்ளலாளர் தெரு, காளவாசல் மெயின் ரோடு, மணிநகர் 2–வது குறுக்கு தெரு, மணிநகர் 3–வது குறுக்கு தெரு, சுக்காங்கல்பட்டி ரோடு குறுக்கு தெரு (நகராட்சி அலுவலக வடக்கு வாசல்), பூங்கா குறுக்கு தெரு மற்றும் சுக்காங்கல் பட்டி ரோடு குறுக்கு தெருவில் பேவர்பிளர் சாலை மேம்பாட்டு பணிகள் செய்தல் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல் | 100.00 |
| | மொத்தம் | **500.00** |

**அலுவலக குறிப்பு –** 1) விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

2) ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2018–19 – ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து தரகோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 5628/2018/இ1)

| | |
|---|---|
| | |

**6.** சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 47718/2013/UGSS-2. நாள். 02.05.2018–ன் படி பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படாத நகரங்களில் – கழிவு நீர் மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்தப்படும் இடத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி கம்பம் நகராட்சிக்கு சொந்தமான கம்பம்–குமுளி சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்தப்படும் இடத்தில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்கப்பட உள்ளது. மேற்காணும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு **ரூ.410.00** இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு: 1)** மன்றம் அனுமதிக்கலாம்
2) தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து தரகோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1699/2018/இ1)

**7.** இந்நகராட்சியின் பாவலர் படிப்பகம் மற்றும் காந்திஜி பூங்கா படிப்பகத்திலுள்ள பழைய நியூஸ் பேப்பர்களை விற்கும் பொருட்டு 18.12.2018 அன்று ஏலம் கோரியதில் வரப்பெற்ற ஏலக்கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பெயர் | ஏலக்கேள்வித் தொகை |
|---|---|---|
| 1. | திரு. எம். சுரேஷ், 5/3, உலகத்தேவர் முதல் சந்து, கம்பம் | கிலோ 1–ற்கு = ரூ. 7.85 |
| 2. | திரு. எம்.கே. அஷ்ரப்அலி 45/13, முகைதீன் ஆண்டவர்புரம் முதல் தெரு, கம்பம் | கிலோ 1–ற்கு = ரூ. 7.25 |
| 3. | திரு. கே. அக்பர், 30/9, தாத்தப்பன்குளம் 13வது சந்து, கம்பம் | கிலோ 1–ற்கு = ரூ. 8.00 |

**அலுவலகக்குறிப்பு..** வரப்பெற்ற மூன்று ஏலக்கேள்விகளில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரிய திரு. கே. அக்பர் என்பவரின் ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 6530/2018/டி2)

**8.** அரசாணை எண். 166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள். 23.11.2016–இன்படி கம்பம் நகராடசி பகுதியில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பிடங்களை ஓராண்டுக்கு பராமரிக்க நகர்மன்ற தீர்மான எண். 1640, நாள். 30.11.2018–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மூ.மு.எண். 28369/ஜே3/2018, 22.11.2018–ஆம் தேதிய உத்தரவில் ஒப்பந்த அடிப்படையிலான துப்புரவு பணிகளுக்கு 5 சதவீதம் மட்டுமே நிர்வாக செலவினம் அனுமதிக்கப்படவேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, மேற்காணும் செலவினத் தொகையில் 5 சதவீதம் நிர்வாக தொகை மட்டும் சேர்த்து தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீட்டு தொகை ரூ. 15.07 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு..<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும் மேற்படி பணியினை செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**3)** உரிய காலத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்படைக்க நிர்வாக காரணங்களினால் காலதாமதம் ஏற்பட்டால், பணியின் அவசியம் கருதி புதிய ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்யும் காலம் அல்லது 3 மாத காலம் இதில் எது முன்னதோ அதுவரை ஏற்கனவே இப்பணியினை செயல்படுத்தி வரும் நிறுவனமான M/s Relyon Facility Service Limited, Chennai நிறுவனத்திற்கு வழங்க அனுமதியும், அதற்காகும் கூடுதல் செலவினத்தினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3398/2016/எச்1) |
| **9.** | சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட மேல்முறையிட்டு வழக்கு எண். W.A.(MD)No. 826 of 2017 மற்றும் C.M.P.(MD) No. 5690 of 2017 –ன் மீதான 23.06.2017 ஆம் தேதிய தீர்ப்பின் மீது, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, உச்சநீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி விண்ணப்பம் 14.05.2018–ஆம் நாள் அரசு வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி தீர்ப்பாணைக்கு தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது (Diary No. 4797/2018) தற்போது 13.07.2018, 31.08.2018, 11.10.2018 மற்றும் 26.11.2018 ஆகிய 4 நாட்களில் நீதிமன்றத்தில் ஆஜராகியமைக்கு வழக்கறிஞர் கட்டணம் மற்றும் இதர செலவினத் தொகை ரூ. 44,000/– ஐ வழங்க வழக்கறிஞர் திரு. ஐ. கணேசன் 13.12.2018–ஆம் தேதி கடிதம் மூலம் கோரியுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு..<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>**2)** அவசர அவசியம் கருதி மேற்படி வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ. 44,000/–ம் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1111/2013/எச்1) |
| **10.** | அரசாணை எண். 166, ந.நி.கு.வ. (MA-IV) துறை நாள். 23.11.2016–ன்படி, கம்பம் நகராட்சிப் பகுதியில் உள்ள 7 நகராட்சி பள்ளிகள் மற்றும் 4 அரசு பள்ளிகளின் வளாகப்பகுதிகள் மற்றும் கழிப்பறைகளை சுத்தம் செய்து பராமரிக்கும் பணியை மேற்கொள்வதற்கு 30.01.2019–ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்த விதிகளின் படி, தினசூரியன் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு மேலாளர், தினசூரியன் நாளிதழ் அவர்களிடமிருந்து பட்டியல் எண். 1661, நாள். 22.12.2018–ன்படி, விளம்பர கட்டணம் ரூ. 14,784.00–க்கு பில் வரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி விளம்பரக்கட்டண தொகை ரூ. 14,784.00–ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3398/2018/எச்1) |

**ஒப்பம்/– திரு ந.சங்கரன்,**
**ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 31.12. 2018**
**இடம். கம்பம்**